# பகவான் யோகிராம்சுரத்குமார் பாடல்கள்

பாலகுமாரன்



மயிலை யோகிராம்சுரத்குமார் சத்சங்கம்

http://www.writerbalakumaran.com



http://www.writerbalakumaran.com

பகவான்

# யோகி ராம்சுரத்குமார்

# பாடல்கள்

http://www.writerbalakumaran.com

# பகவான் யோகி ராம்சுரத்குமார்

## ஒரு அறிமுகம்

**க**ங்கை கரைக்கு அருகே உள்ள கிராமம். அங்கே ஒரு வீடு, தாயார் தன் மகனை கிணற்றிலிருந்து நீர் இறைத்து வரச் சொல்கிறார். மகன் வாளியும் கயிறுமாய் போக, கிணற்றுக் கைப்பிடிச்சுவரில் ஒரு பறவை உட்கார்ந்து கீச்சிட்டுக் கொண்டிருக்கிறது.

"அட... போ" என்கிற எண்ணமாய் அந்தப் பையன் பறவை துரத்தும் வகையில் கயிறு வீச கயிறு பறவையின் மீது பட்டு கண நேரத்தில் பறவை இறந்து போகிறது.

கொல்லும் எண்ணமில்லை, ஆயினும் ஒரு உயிர்க் கொலை நடந்துவிட்டது. கெட்டது செய்யும் முனைப்பே இல்லை. ஆனால், கொடுமை நிகழ்ந்துவிட்டது. சிறுவன் பதறிப் போய் நிற்க விதி என்பதன் விஸ்வரூபம் புரிந்தது.

இந்த விதியை எதனால் ஜெயிக்க முடியும் மதியினாலா, ஆமெனில் மதி எவரிடம் கிடைக்கும். எப்படி பெற முடியும் என்று மன உளைச்சலில் அந்தச் சிறுவன் ஈடுபட, கங்கைக் கரையோரம் வசிக்கும் சாதுக்கள் நடுவே கேள்விகளோடு அலைய, வாழ்க்கை திசைமாறிப் போயிற்று, கடவுள் தேடும் எண்ணம் மெல்ல மெல்ல பலப்பட்டது. உலக வாழ்க்கையில் நாட்டம் குறைந்தது.

http://www.writerbalakumaran.com

அந்தச் சிறுவன் தான் திருவண்ணாமலை மகான் யோகி ராம்சுரத்குமார்.

உலக வாழ்க்கை உதறி கடவுள் தேடலில் முற்றிலுமாய் இறங்கி பாரதத்தின் எல்லா இடங்களுக்கும் மனம் போன போக்கில் பயணப்பட்டு பாண்டிச்சேரி ஸ்ரீ அரவிந்தரை, பகவான் ஸ்ரீ ரமணரை, காஞ்சன்காடு பப்பா ஸ்ரீ ராமதாஸ் அவர்களை தரிசிக்க உள்ளொளி பெற்று திருவண்ணாமலை ரயிலடிக்கு வந்து அங்குள்ள புன்னை மரத்தடியில் நிரந்தரமாய் தங்கி விட்டார். வெகுநாள் அங்கே தன் ஆத்மபோதம் மறைத்துக் கிடந்த அவரைச் சில அன்பர்கள் புரிந்து கொண்டு சன்னதித் தெருவில் சிறிய வீடு வாங்கி தங்க வைத்தார்கள். அங்கே வந்து அவரை தரிசிப்பவர்கள் அதிகமானார்கள்.

வந்த அன்பர்களோடு நன்கு சம்பாஷித்து பிரச்சனையின் மையம் அவர்களுக்குத் தொட்டுக் காட்டி அவர்களின் மனச்சுமை குறைத்து இறை தாகம் அதிகமாக்கி, தான் இடையறாது சொல்லி சித்தி அடைந்த ராமநாமத்தை, சகலரையும் சொல்ல வைத்தார். அங்கு அவர் நடத்திய அதிசயங்கள் கணக்கிலடங்காதவை.

திருவண்ணாமலை சன்னதித் தெருவில் அவர் ஆன்மீக சாம்ராஜ்ஜியம் விரிவடைந்தது. எனவே, திருவண்ணாமலை எல்லையில் ஆஸ்ரமம் அமைத்தார். மிகப் பெரிய ஆஸ்ரமம் பல கோடி ரூபாய் செலவில் நிறுவப்பட்டது.

பகவான் யோகி ராம்சுரத்குமார் என்கிற அவருடைய பெயரே மந்திரம். அதை திரும்பத் திரும்ப சொல்ல மனம் ஒருமுகப்படும். உலகம் முழுவதும் இந்த நாமம் பரவி இருக்கிறது.

http://www.writerbalakumaran.com

உங்கள் பிரச்சினை எதுவாய் இருப்பினும் மூன்று முறை என் பெயரைச் சொல்லுங்கள் போதும். யோகி ராம்சுரத்குமார், யோகி ராம்சுரத்குமார், யோகி ராம்சுரத்குமார், ஜெயகுருராயா என்கிற மந்திரம் போதும். மாற்றத்தை உடனே உணர்வீர்கள். நான் அங்கு அரூபமாய் வந்து உதவி செய்வேன் என்று பகவான் யோகி ராம்சுரத்குமார் சொல்லியிருக்கிறார்.

இவர் பெயரைச் சொல்லும் பக்தர்கள் நாளுக்கு நாள் அதிகரித்து மிகப்பெரிய ஆன்மீக குழுவாய் வளர்ந்து வருகிறார்கள்.

**- பாலகுமாரன்**

**யோகி ராம்சுரத்குமார் க்ருபா**

80/4, வாரன் சாலை,

மயிலாப்பூர், சென்னை - 4.

❖ ❖ ❖

http://www.writerbalakumaran.com

# வாழ்த்துப் பாடல்கள்

யோகி ராம்சுரத்குமாரம்
யோகி ராம்சுரத்குமாரம்
தேவஜாதி மனித ரூபம்
யோகி ராம்சுரத்குமாரம் (2 முறை)

ஆலம் போல விழுது விட்டு
ஆழமாக நின்ற வேதம்
நெற்றி நாமம் சக்தி ரூபம்
யோகி ராம்சுரத்குமாரம்.... (யோகி)

பட்டணிந்த லிங்க ரூபம்
யோகி ராம்சுரத்குமாரம்
பட்டணிந்த லிங்க ரூபம்
யோகி ராம்சுரத்குமாராம்.... (யோகி)

மலையணிந்த மேகம் போல
மாலையோடு தவசிக் கோலம்
கருணையால் வளர்ந்த யாகம்
கண்களில் கனிந்த பாவம்.... (யோகி)

சகலமும் அறிந்த சாந்தம்
யோகி ராம்சுரத்குமாராம்...
சகலமும் அறிந்த சாந்தம்
யோகி ராம்சுரத்குமாரம்... (யோகி)

பூக்களுக்குள் பூவைப் போல
சக்தி சிவம் சேர்ந்த ரூபம்
பூமி வந்த சந்திர காந்தம்
யோகி ராம்சுரத்குமாரம்... (யோகி)

எவர் வணங்கி நின்ற போதும்
அள்ளி அள்ளி தந்த போதம்
சாம கான வேத நாதம்
யோகி ராம்சுரத்குமாரம்.... (யோகி)

http://www.writerbalakumaran.com

# அன்பு பெருக்கத்தில் நனைதல்

முதா கராத்த மோதகம்
சதாவி முக்தி சாதகம்
கலாதராவ தம் சகம்
விநாசி லோக ரக்ஷகம்
அநாய கைக நாயகம்
விநாசி தேப்ரதைத்யகம்
நதாசுபாசு நாயகம்
நமா மிதம் விநாயம்....

வராது வந்த நாயகன்
சுகானுபாவம் தந்தவன்
அனாதியாகி நின்றவன்
அயோதி ராம ரூபகன்
விநோதகன் விநாயகன் - என்
யோகி ராம்சுரத்குமார...

நாதவேள்வி நாரதன்
சமாதி பாவ பூர்வரன்
இதந்தரும் சொலல்வலன்
சதம் எனுள் நிறைந்தவன்
தபோவனன் தயாபரன் - என்
யோகி ராம்சுரத்குமார....

http://www.writerbalakumaran.com

நாம வேள்வி காரணன்
ராம நாம தாரகன்
வரம் தரும் சுரேஸ்வரன்
நிரந்தரம் நிறைந்தவன்

நிலா மலர்ந்த பூமியாய்
உலா வரும் பிரபாகரன்
விலாசமின்றி சாமியாய்
வளர்ந்த ஞான போதகன்
உன்னோடு நான் என்னோடு நீ
எல்லாம் ஒன்றாய் கலந்தசென்ற
நீதி பேசும் ஈஸ்வரன்
ஜோதி ரூப மாதவன்..... (வராது வந்த)

❖ ❖ ❖

http://www.writerbalakumaran.com

## பெருமை கூறல்

பார்த்த பார்வையில்
பாவம் தீர்த்திடும்
கங்கையாய் இங்கு வந்தவன்
வார்த்தை மீறியொரு
ஞான வேள்வியை
வாழ்க்கையாய் வந்து செய்பவன்

வேதநாயகன் ஞான ரூபகன்
யோக வடிவில் ராமனே
தாதையாய் எங்கள் தாயுமாய்
நின்ற யோகி ராம்சுரத்குமரனே

கீர்த்தியான மலை அருணை மாநகரில்
தெய்வக் குழந்தை யோகியே
வேர்ப்பலா மரம் வெண்ணிலா நிறம்
யோகி ராம்சுரத்குமரனே.

(மறுமுறை முழுவதும்)

http://www.writerbalakumaran.com

## ஊஞ்சல் பாட்டு

பூர்வ ஜென்ம புண்ய மிது உன்னைக் கண்டது - இது
போன ஜென்ம வாசனையில் அருகில் வந்தது
மனமறியா மொழியினிலே பேசி நின்றது - உன்
மலர் முகத்தை மறுபடியும் பார்க்க வந்தது.
ராமா லாலி கிருஷ்ணா லாலி - யோகி லாலி ஸ்வாமீ லாலி.

கண் மலரில் காந்தரேகை மிளிர நின்றது - அது
கால காலமாய் இழுத்துக் கொண்டு வந்தது
புன் சிரிப்பில் யாகத் தீயைக் காட்டி நின்றது - இங்கு
யோகி ராம்சுரத்குமாரம் பெயரைக் கொண்டது.
ராமா லாலி கிருஷ்ணா லாலி - யோகி லாலி ஸ்வாமீ லாலி.

பிச்சையென்று தன்னைத் தானே சொல்லிக் கொண்டது ஒரு
பேரரசன் போல இங்கு சபையும் வந்தது
ஞானமென்னும் பூமியிலே ராஜனல்லவா - நீ
ராவணனைச் சிரமறுத்த ராமனல்லவா
ராமா லாலி கிருஷ்ணா லாலி - யோகி லாலி ஸ்வாமீ லாலி.

கண்ணனவன் மறுபடியும் காதலாகவே - நல்
யோகியாகப் பிறந்து வந்தான் கீதை பேசவே
விண்ணதிரப் பேசிப் பேசி மனிதராடவே - யோகி
வாழ்வு தன்னைவகுத்துக் கொண்டான் கீதையாகவே
ராமா லாலி கிருஷ்ணா லாலி - யோகி லாலி ஸ்வாமீ லாலி.

பச்சைப்பட்டு கிரீடமாக அலங்கரிக்கவே - உன்
பனை விசிறி ரெட்டையாக உலகம் ஆளுதே
இச்சையென் பதிங்கு இனி உன்னைக் காணவே - வேறு
எதுவுமில்லை எமக்கு யோகி நாமம் தவிரவே
ராமா லாலி கிருஷ்ணா லாலி - யோகி லாலி ஸ்வாமீ லாலி.

http://www.writerbalakumaran.com

அருணை நகர்க் கோயில் வாசல் கருணை வெள்ளமே - நீ
ஆடு ஊஞ்சல் நாங்கள் பாட கிருஷ்ணன் போலவே
சால்வையோடு தென்றல் வீசி சிகை சிரிக்கவே - உன்னைக்
காண இங்கு கோடி கோடி கண்கள் வேண்டுமே.
ராமா லாலி கிருஷ்ணா லாலி - யோகி லாலி ஸ்வாமீ லாலி.

வேணுகான ஓசையாக நீயும் பாடவே - நாம்
கேட்டிருக்க வேணும் அதை வேதம் போலவே
நெஞ்சடியில் உந்தன் ஜோதி சிந்தை குளிரவே - இனி
ஜென்மமில்லை நரகமில்லை சொர்க்கம் அருகிலே
ராமா லாலி கிருஷ்ணா லாலி - யோகி லாலி ஸ்வாமீ லாலி.

யோகி ராம்சுரத்குமாரம் காது முழுவதும் - என்
யோகி ராம்சுரத்குமாரம் கண்கள் உண்டதும்
யோகி ராம்சுரத்குமாரம் உள்ளிருப்பதும் - இந்த
யோகி ராம்சுரத்குமாரம் அண்ட வெளியிலும்
ராமா லாலி கிருஷ்ணா லாலி - யோகி லாலி ஸ்வாமீ லாலி.

வானமதும் பூமியதும் சேர்ந்து ஆடுதே - உன்
ஊஞ்சல் ஓசை ப்ரணவம் போலக் கேட்டிருக்குதே
ஊனுடம்பு தாண்டியொரு ஒளியும் வீசுதே - நான்
உன்னில் வாழ என்னில் நீயும் காட்சியாகுதே
ராமா லாலி கிருஷ்ணா லாலி - யோகி லாலி ஸ்வாமீ லாலி.

நீயும் நானும் அருகிருக்கத் தீயும் வளருதே - அத்
தீத்தழலில் நீயும் நானும் வேறு இல்லையே
காயும் நிலவு ஜோதியதில் என்னைச் சேர்த்ததே - என்
யோகி ராம்சுரத்குமாரம் வாழ்க வாழ்கவே
ராமா லாலி கிருஷ்ணா லாலி - யோகி லாலி ஸ்வாமீ லாலி.

❖ ❖ ❖

http://www.writerbalakumaran.com

# குருவை அறிய குருவை வேண்டல்

பூமிநாத ஸ்வாமிநாத வேணுகான தேவனே
யோகி ராம்சுரத்குமார ப்ராணநாத ஈசனே (பூமி)

உன்னில் வந்து கேட்ப தொன்று
மெல்ல சொல்லவோ (2 முறை)
சிங்கம் போல பார்த்திடாது
ஸ்நேகமான தோர்
புன்னகை நீ சிந்திட
என் யோக ராஜனே
பேச வேணும் கொஞ்ச நேரம்
சலனம் தீரவே... (பூமி)

கண்ணில்லாத நான்கு பேர்கள்
யானை பார்த்தல் போல்
என்னுள் உன்னைத் தேடித் தேடி
அயர்ச்சி யானதோர்
உண்மையோ நீ நன்மையோ
என் ஆவி தாங்குமோ
தீய கேள்வி என்னுள் வந்து
சாம்பராக்குதே.... (பூமி)

http://www.writerbalakumaran.com

தீய கேள்வி மூலம் ஏது
நீயும் அல்லவோ
நீயிலாது என்னுள் ஏதும்
தோன்றலாகுமோ
ராமனே என் ராஜனே
என் ப்ராண ஸ்நேகனே
பேச்சுப் பிழைகள் பொறுக்க வேணும்
பேதை ஞானமே... (பூமி)

போரில் கண்ணன் தேரை நிறுத்தி
கீதை பேசவே
முழுதும் கேட்டு முழித்த பார்த்தன்
எனது அண்ணனே
விழித்த போது கண்ணன் பொங்கி
விஸ்ப ரூபமே
காட்டினான் தனை நாட்டினான்
ஓர் கடவுளாகவே... (பூமி)

உன்னை என்னுள் யானை போல
காட்டலாகுமோ
குருடர் நால்வர் என்னுள் உண்டு
பேச்சு போகுமோ
காட்டுவாய் என் கண்ணனே
உன் விஸ்வ ரூபமே
தாங்குமாறு வலிவு ஏற்று
கேள்வி போகுமே.... (பூமி)

http://www.writerbalakumaran.com

# ஞானம் வேண்டல்

அசதோமா சத்கமய
தமசோமா ஜோதிர்மய
ம்ருத்யோமா அம்ருதம் கமய

மெல்ல மெல்ல வெங்கதிர் போல்
என் மனதுள் நீ புகுந்தாய்
உள்ளமெனும் கருங்குகையில்
என் இருப்பு காண வைத்தாய்
விழி மலரே தேன் சுவையே
யோகி ராம்சுரத்குமாரா
உண்ணாமல் இனிக்குதையா
உன் நாமம் உருக்குதையா... (அசதோமா)

ஐம் புலனும் ராட்சஸர்கள்
அறுசுவையும் பேய் கணங்கள்
என் காதல் மாமிசங்கள்
நீயறுக்க நான் இறந்தேன்
என் மரணம் உன் மடியில்
என் விதியோ உன் விரலில்
என் மனமோ உன் ஒளியில்
உன் கொடியோ என் சிரசில்...

(அசதோமா)

http://www.writerbalakumaran.com

கனக மணிச் சக்கரங்கள்
கண் முன்னே நடமாட
பெருவெளியின் சங்கொலியோ
என் செவியில் இசைபாட
வான் நீலம் வண்ண மயம்
என்னுள்ளே எனையிழுக்க
நானதுவே நீயதுவே
யோகி ராம்சுரத்குமாரா.... (அசதோமா)

தாய் சொல்ல அறிந்த மொழி
தந்தை சொன்ன குறுக்கு வழி
ஊர் சொன்ன பெரும் புரளி
எக்கதையும் எனக்கில்லை
சொல்லாமல் நீ சொன்ன
சொர்க்கத்தை நானடைந்தேன்
கல்லாலின் ஈஸ்வரனே
யோகி ராம்சுரத்குமாரா... (அசதோமா)

நீ யொன்றே ப்ரம்மமயம்
நீ யொன்றே ஞானமயம்
நீ யொன்றே நாத மயம்
யோகி ராம்சுரத்குமாரா... (அசதோமா)

❖ ❖ ❖

http://www.writerbalakumaran.com

## குருவோடு இருக்க இறைஞ்சுதல்

ஒரு மனதாய் உன் திருவே
அனவரதம் மலர்ந்திடவே
என் மனதும் உன் மனதும்
ஒரு மனதே பிரிவில்லையே

தெருவினிலே உருவமெலாம்
தெரிந்ததுவே உன் நிழலே
மருவுமெலா உறவுகளும்
உன்னுருவே பிறிதில்லையே

கலந்ததினால் கரைந்து விட்டேன்
கரைந்ததையும் மறந்து விட்டேன்
யோகி ராம்சுரத்குமார்
யோகி ராம்சுரத்குமார்

எங்கேயும் எப்பொழுதும்
யோகி ராம்சுரத்குமார்
யோகி ராம்சுரத்குமார்
யோகி ராம்சுரத்குமார்

என்னுள்ளே என்னுருவாய்
யோகி ராம்சுரத்குமார்
யோகி ராம்சுரத்குமார்
யோகி ராம்சுரத்குமார்

http://www.writerbalakumaran.com

# தான் என்னும் கர்வம் நீங்க

**ராகம் : ஸஹானா**

மெல்ல ஒரு அம்பெடுத்து என்னைக் கொல்லுவாய் ராமா
மோகமெனும் ராட்ஸனை மூளி செய்குவாய் ராமா

1. கொல்லுதற்கு முன்பு வந்து சொன்னவருண்டோ - உந்தன்
கூர்ச்சரத்தைத் தாங்குதற்குக் கேட்ட வருண்டோ - ராமா

(மெல்ல)

2. வாசமிகு இளமையிலே கேட்டதில்லையே நான்
வாய் திறந்து உன் சரிதம் சொன்னதில்லையே ராமா -

(மெல்ல)

3. கண்வெளிறி தலை நரைத்த காலம் வந்ததே - நான்
கண்டவையும் கொண்டவையும் கந்தலாச்சுதே - ராமா

(மெல்ல)

4. காதலுடன் காத்திருந்த சபரியில்லையே நான்
கனிவுடனே பார்த்திருந்த அனுமனில்லையே ராமா

(மெல்ல)

http://www.writerbalakumaran.com

5. தீய இடம் மாறிவரும் தெளிவுமில்லையே என்னுள்
உனையறியும் விபீடணச் சரணமில்லையே ராமா

(மெல்ல)

6. வெளியுருவம் மானிடராய் ஊரறிந்தாலும் - என்னுள்
வெறி பிடித்த ராட்சஸங்கள் இன்னும் உள்ளரே - ராமா

(மெல்ல)

7. நோகுமென கருணையுடன் பார்ப்பதென்னவோ - இந்த
நொய்மை மிகு வாழ்க்கையிலே சாரமுள்ளதோ ராமா

(மெல்ல)

8. நாளை தினம் ராவணனை வாவெனச் சொன்னாய் இங்கே
நான் வரவும் நீ அதனைச் சொல்லலாகுமோ ராமா

(மெல்ல)

9. வில்லெடுத்து விரல் அழுத்தி நாணிழுப்பாயே ராமா
என் மரணம் வரமெனவே நீ தருவாயே - ராமா

(மெல்ல)

10. 'நான்' இருக்க உனையறியும் அறம் வளராதே - ராமா
அறம் வளர அறம் வளர எனை அழிப்பாயே ராமா

(மெல்ல)

❖ ❖ ❖

http://www.writerbalakumaran.com

# தாக்கும் துன்பம் நீக்க

புத்தியில் சிறுமையும் பொருளிலே வறுமையும்
கண்ணிலே கருமையும் நெஞ்சிலே வெறுமையும்
கொண்டு நானலைகிறேன் இன்னலே இன்னலே
அஞ்சனா மைந்தனே அனுமனே சரணமே.

வீண்பழி குற்றமும் வேதனைச் சொற்களும்
நஞ்செனக் கொல்லுதே அனுமனே அனுமனே
காடுகள் மேய்ந்திடக் கன்றென வந்த நான்
திக்குகள் இருண்டிட தவிக்கிறேன் அனுமனே.

ராமனின் துயரமும் சீதையின் தனிமையும்
சிதறிடச் செய்த நீ வருகுவாய் விரைவிலே
கண்டனன் சீதையை என்பதாய் சொல்லியே
ராகவன் மகிழ்ந்திடச் செய்த என் அனுமனே

தோல்வியாம் சிறையினில் தனிமையாய் தீவினில்
தவிக்கிறேன் அனுமனே விரைகுவாய் மீட்கவே.
ராமனின் நாமமும் என் குருபெயரையும்
ஒன்றெனச் சொல்கிறேன் இங்குவா அனுமனே.

ராமராம் ராமராம் ராமராம் ராமராம்
ராமராம் ராமராம் ராமராம் ராமராம்
ராமராம் ராமராம் ராமராம் ராமராம்
ராமராம் ராமராம் ராமராம் ராமராம்

யோகி ராம்சுரத்குமார் யோகி ராம்சுரத்குமார்
யோகி ராம்சுரத்குமார் யோகி ராம்சுரத்குமார்
யோகி ராம்சுரத்குமார் யோகி ராம்சுரத்குமார்
யோகி ராம்சுரத்குமார் யோகி ராம்சுரத்குமார்

http://www.writerbalakumaran.com

## உடுக்கை பாட்டு

கங்கையின் வேகம் கொண்டு
காசியில் வேதம் கண்டு
சிங்கமென எங்க பக்கம்
வந்த துரையே
யோகிராமா சுரத்குமாரா
பொங்க தமிழ் நாட்டில்
உந்தன் அன்பு மழையே.

சீமைத் துரைகளெல்லாம்
சுற்றிப் பணிந்து நின்று
சல்லாபம் பண்ணுகிற
எங்க துரையே,

செங்கதிர் வானம் போல
செங்கமல வாசம் வீச
மெய்ஞ்ஞானம் பேசுகின்ற
சாமித்துரையே... (யோகி)

ஆசாமி பத்துப் பேரு
அரசியல் வெத்து வேட்டு
மோசங்கள் பண்ணும் போது
எங்க துரையே

http://www.writerbalakumaran.com

மூச்சாலே தூக்கிப் போட்டு
ஆட்சியை மாற்றிக் காட்டி
பேசாது யுத்தம் செய்த
பாண்டித்துரையே (யோகி)

கண்ணின் கருமணியாம்
உந்தன் அடியரெல்லாம் (2 முறை)
வாசலில் கூடி நின்று
எங்க துரையே
சிந்தனை பந்தம் பண்ணி
உன் நாம் வேதம் சொல்ல
வாய்விட்டுச் சிரிப்பதென்ன
சாமி துரையே (யோகிராமா)

பிச்சை புகுதல் நன்று
போடுதல் நீதியென்று
இச்சையின்றி சொல்லித்தந்த
எங்க துரையே
சித்தமுடன் வந்து நின்றோம்
புத்தியென்ற எங்கள் ஓட்டில்
பிச்சையிடு காதல் சோறு
எங்க துரையே (யோகிராமா)

நீயிட்ட பிச்சை சோறு
உண்டதும் மோகம் போச்சு
நீரிட்ட தீயைப் போல
எங்க துரையே
நெருப்பினில் பஞ்சைப் போல
நானென்னும் கர்வம் போக
உன்னுள்ளே கரைந்து போனேன்
காசித் துரையே (யோகிராமா)

http://www.writerbalakumaran.com

அதிகாரம் பண்ணிப் பண்ணி
அச்சங்கள் மிச்சத்தோடு
புதிராக இருந்த நெஞ்சில்
எங்க துரையே
சத்தியத்தை நாட்டி வைத்து
சாமி பேரும் சொல்லப் பண்ணி
உச்சத்தில் கொண்டு வைத்தாய்
ராம துரையே (யோகிராமா)

அச்சங்கள் ஏதுமின்றி
ஆர்பாட்டக் கூச்சலின்றி
ஆனந்தம் வந்தபோது
எங்க துரையே
சொச்சமாம் வாழ்வு நாளை
சுகமாக உந்தன் பேரைச்
சொல்லியே இங்கிருப்போம்
ஞானத் துரையே (யோகிராமா)

❖ ❖ ❖

http://www.writerbalakumaran.com

# பிணிகள் தீர

அருணாசலம் அமர்ந்த புண்யம்
யோகி ராம்சுரத்குமாரம்
அருணாசலம் அமர்ந்த புண்யம்
யோகி ராம்சுரத்குமாரம்
கருணை மேவும் ஞான தீபம்
யோகி ராம்சுரத்குமாரம்

1. தருணம் போதும் மனதில் நினைக்க
வந்து நிற்கும் உதவி செய்ய
அருணன் போல ஜோதியாக
எங்கும் உள்ள இறைவனாக (அருணா)

2. படியில் நின்று பார்த்தல் போதும்
ஜென்ம ஜென்ம பாவம் போகும்
அருகில் நின்று உருகிப்பாட
அதற்கு ஈடாம் சோமயாகம் (அருணா)

3. சோமயாக ஸ்வாமிநாதன்
நீதி பேசும் வேத ராமன்
ப்ரேமையான வார்த்தை சொல்லி
சோகம் தீர்க்கும் ஸ்நேக ராஜன் (அருணா)

http://www.writerbalakumaran.com

4. ரெட்டை விசிறி பச்சைத்துண்டு
கையில் காலி சிரட்டை உண்டு
பிச்சையென்று சொல்லிக் கொண்டு
பிணிகள் தீர்க்கும் மா மருந்து (அருணா)

5. உன்னில் என்னில் கடவுள் உண்டு
உருவமற்ற வெளியில் உண்டு
பிறரை நேசி அறிவை யாசி
என்று சொல்லும் எங்கள் யோகி (அருணா)

6. நாம ஜபமே கலியின் வேதம்
குருவின் குருவாம் ராம தாஸம்
சொன்ன அந்த மந்த்ர ரூபம்
யோகி விரலில் நாதமாகும்
ஸ்ரீராமா ஜெயராமா
ஜெயஜெய ராமா
ஜெயஜெயராமா ஜெயஜெயராமா
அருணாசலம் அமர்ந்த புண்யம்

யோகி ராம்சுரத்குமாரம்
அருணாசலம் அமர்ந்த புண்யம்
யோகி ராம்சரத்குமாரம்
யோகி ராம்சுரத்குமாரம்
யோகி ராம்சுரத்குமாரம்

❖ ❖ ❖

http://www.writerbalakumaran.com

# ராம மகிமை உள்ளே தோன்ற

ஸ்ரீ ராம சந்திர கிருபாகரா என
சந்ததம் மனம் கூவிடும்
என் யோகிராம சுரத்குமாரா
உந்தன் நாமமே காரணம்
ஸ்ரீராம் ஸ்ரீராம்

1. அருணாசலம் மலையோரமாய் - வளர்
ப்ரேமையால் சுகபாவமாய்
கருணாநிதே எனை மாற்றினாய் - கவி
வால்மீகி கதை காட்டினாய் (ஸ்ரீராமசந்திர)

2. உயர் வேதம் ஆயிரம் தேறினும் - அந்த
ராவணன் மனம் காமமாய்
துயராழி சூழ்ந்தது காட்டினாய் - என்
மோக மனதை மாற்றினாய்(ஸ்ரீராமசந்திர)

3. ராமனென்பது தோழமை - ஸ்ரீ
ராமமென்பது காதலாம் - ரகு
ராமமென்பது வீரமாம் - இந்த
மூன்றுமே இதில் வேதமாம் (ஸ்ரீராமசந்திர)

4. தாஸமாருதி சாகஸம் - தாய்
சீதை காட்டிய சோகமும் - நம்
ஸ்நேக ராமனின் சீற்றமும் - நீ
சொல்லக் கேட்பது பாக்கியம் (ஸ்ரீராமசந்திர)

5. துளசிதாஸரும் கம்பரும்
அருணாசலக் கவிபோலவும்
உயர் புலவர் ஆயிரம் தோன்றுவார்
தினம் ராம கதையைக் கூறுவார் (ஸ்ரீராமசந்திர)

http://www.writerbalakumaran.com

## அடியார்க்கு அடியார்களோடு வாழ

1. எங்கும் நிறைந்தொரு வேதக்கருப் பொருள்
இங்கு மலர்ந்ததுவோ
பொங்கு மலர் சுழல கங்கையென வந்து
என்னுள் கலந்ததுவோ
திங்கள் விரிசடை ஈசன் மனம் வைத்து
இங்குபிறந்தனனோ
சங்கத் தமிழ் கண்ட ஞான அருணையில்
க்ஷேமம் வளர்ந்தனனோ.

2. க்ஷேமம் வளத்திடப் பாயை விரித்தொரு
யாகம் வகுத்தனனோ
இரட்டை விசிறிகள் வீசிடும் ஓசையில்
மந்திரம் சொல்லினனோ
தெங்கு மரத்தின் காய்ந்த சிரட்டையில்
ஆகுதி போற்றினனோ
தீயொளி கேசிக யோகியனாய் இங்கு
தன்னை நிறுத்தினனோ.

3. தன்னை நிறுத்திய யோகியைச் சூழ்ந்ததொரு
ராஜ்ஜியம் வந்ததுவோ
வெள்ளை நிறக்கொடி வேதநெறிவழி
வாழ்க்கை மலர்ந்ததுவோ

http://www.writerbalakumaran.com

கள்ளம் ஒழிந்தது; காமம் அழிந்தது
காவியம் ஆனதுவோ
யோகிராமா சுரத்குமாரா வாழ்த்தொலி
கேட்டதுவோ.

4. வாழ்த்திய நெஞ்சங்கள் புண்ணிய ஜென்மங்கள்
இங்கு கலந்தனரோ
சூழும் இருளினை நீக்கவென வொரு
சொல்லை உணர்ந்தனரோ
வாழும் வகையென வாய்மைக்கு நேரென
வாக்கியம் கண்டனரோ
யோகிராமா சுரத்குமாரா
என்றவர் பாடினரோ.

5. யோகிராமா சுரத்குமாரா
நித்தமும் பாடிடுவோம்
யோகிராமா சுரத்குமாரா
நெஞ்சுக்குள் போற்றிடுவோம்
யோகிராமா சுரத்குமாரா
நோயற்று வாழ்ந்திடுவோம்
யோகிராமா சுரத்குமாரா
நிம்மதி நாமடைவோம்.

❖ ❖ ❖

http://www.writerbalakumaran.com

# ஞான வாழ்க்கை விழையல்

1. வலிவாக்கும்; வாழ்வுதனை வளமாக்கும்
தாள்பணியத் தெளிவாக்கும்; ஞானம் பெருக்கும்
கனிவாக்கும்; ஆதலால் எல்லோரும்
நாடுவீர் யோகிராம்சுரத்குமாரனை

2. நேராக்கும்; நெஞ்சுகதிச் சீராக்கும்
நீவிடக் கீழார்க்கும் க்ஷேமம் பிறக்கும்
துணையார்க்கும் செய்திடவழி நோக்கும்
வணங்குவீர் யோகி ராம்சுரத்குமாரனை

3. குழைவாக்கும்; இறைதேடும் விழைவாக்கும்
பிழைபோக வழிகாட்டும்; யோகம் வளர்க்கும்
செல்வாக்கும் கை கூடிச் சேர்ந்தாடும்
பாடுவீர் யோகி ராம்சுரத்குமாரனை

4. தானாக்கும்; தான் தெரியத் தேனாக்கும்
மனம் குவியச் சிவமாக்கும்; வாலை நடம் புரியும்
வானாக்கும்; வந்தவரை விரிவாக்கும்
தேடுவீர் யோகிராம்சுரத்குமாரனை

5. மறையாகும்; மறைபொருளின் உருவாகும்
அருணை மலைச்சுடராகும்; ஜெகமெங்கும் ஒளிரும்
இருள் நீக்கும் என்குரு மலர்ப்பாதம்
காணுவீர் யோகிராம்சுரத்குமாரனை

6. மனமே யோகி அருள் பெறுவாய் என்
குருவின் ஆணை யோகபலம் அடைவாய்
யோகபலம் அடைவாய்
யோகபலம் அடைவாய்.

http://www.writerbalakumaran.com

# யோகி ராம் சுரத்குமார்

என் நினைவினில் வாழும் யோகீஸ்வரன்
யோகீஸ்வரன் யோகீஸ்வரன்

தரையினில் வாடும் தாமரையாய்
உருவிய கொடியாய் உதிர் பூவாய்
சிதறிய வாழ்க்கை சீரமைத்தாய்
யோகீஸ்வரன் யோகீஸ்வரன்

விடியலில் புரள உன் பெயரே
விடிந்தபின் பார்ப்பது உன் திருவே
சுடுநீர்க் குளியலில் குருஜெபமே
இவ்விதம் துவங்கும் என் தினமே

குளித்த பின் பூஜை மணிமாடம்
கும்பிட்டுச் சொல்வது உன் நாமம்
உண்கையில் உடுக்கையில் உன் பெயரே
யோகீஸ்வரன் யோகீஸ்வரன்

வேலை நேரம் உன் பாதம்
வீற்றிட நெஞ்சுள் உல்லாசம்
கதிரவன் ஏறக் களைப்பாகும்
களைந்திட மருந்தாம் உன் நாமம்

மாலை நெரிசலில் ஆயிரம் பேர்
முகமன் சொல்வது உன் திருப்பேர்
வாழ்த்தவோ வையவோ எவரும் வர
வணங்கி நான் சொல்வது உன்னருள் பேர்.

http://www.writerbalakumaran.com

கற்களாய் முட்களாய் பாதையிலே
கவலையாய்க் கடுமையாய்த் தாக்கையிலே
கதறிட வருவது உன் ஜெபமே
யோகீஸ்வரன் யோகீஸ்வரன்.

ஊரது மூழ்கும் நாடகத்தில்
ஒலி ஒளி காட்சி முன்னிரவில்
சூழ்ந்திடும் தனியே கரும் இருளே - நான்
சுடரென நிற்பேன் உன்னருகே

மறுபடி சோறு, குரு நினைவு
தெருநடை ஓரம் பிறை நிலவு
நடந்திடப் பாடும் என் மனசு
யோகீஸ்வரன் யோகீஸ்வரன்.

வீடது தூங்கும் குயில் கூடாய்
உன்னருள் வீசும் குளிர் காற்றாய்
நாடிய யாவும் நானடைந்த
நிம்மதி சூழ்ந்திடும் இருநிதியாய்

நாளைய வாழ்வும் குருவருளே
யோகி ராம்சுரத்குமார் என்னுடனே
இருந்திடப் பயமேன் என் மனமே
யோகீஸ்வரன் யோகீஸ்வரன்.

❖ ❖ ❖

http://www.writerbalakumaran.com

# செய்யும் எல்லா நற்காரியங்களிலும் யோகியின் துணை நாடல்

1. எங்குநா னிருப்பினும் செய்வதேது ஆயினும்
ஏகனாயிருப்பினும் கூட்டமோடு ஆடினும்
பொங்கு கோபமாயினும் பூஞ்சிரிப்பு ஆயினும்
யோகி ராம்சுரத்குமார் என்னை வந்து ஆளுவாய்.

2. நல்லனாய் இருப்பினும் அல்லவேறு ஆயினும்
கள்ள ஞானப் பொய்மையோடு காதல் பேச்சு பேசினும்
பள்ளம் பாயும் நீரைப்போல காமவேகம் ஆயினும்
யோகி ராம்சுரத்குமார் என்னை வந்து ஆளுவாய்.

3. கடந்து போன பாதையில் நடந்து போன வேதனை
கிடங்குபோலப் பூட்டியே அடங்கி வாதை செய்யுமே
தடங்கள் யாவும் மாற்றி வைத்து தன்மை மேலும் ஏற்றியே
யோகி ராம்சுரத்குமார் என்னை வந்து ஆளுவாய்.

4. வாடி நின்ற பூமிபோல் வானம் பார்த்த ஏரிபோல்
பாடிப்பாடித் தன் இணை தேடுகின்ற பேடைபோல்
தேடித்தேடி என்னுள்ளே உந்தன் நாமம் சொல்கிறேன்
யோகி ராம்சுரத்குமார் என்னை வந்து ஆளுவாய்.

5. வாழ்க்கை யிங்குவேதனை வாய்மை யாவும் சோதனை
தாழ்வுறாத வண்ணம் வந்து எந்தன் நெஞ்சில் தங்குவாய்
சூழ்ந்து வந்த ஊழ்வினை சுற்றி நின்று தாக்கையில்
யோகி ராம்சுரத்குமார் என்னை வந்து ஆளுவாய்.

http://www.writerbalakumaran.com

6. என்னுள் வந்து தங்கி நீ இரும்பில் செய்த வாளதாய்
வெண்ணெய் பூசித் தோகையோடு வீசுகின்ற கருவியாய்
நாணுகின்ற செயல்கள்யாவும் நான் துணித்து நிற்கவே
யோகி ராம்சுரத்குமார் என்னை வந்து ஆளுவாய்.

7. சுற்றி நின்ற உறவுகள் சோம்பலின்றி வாழவும்
பற்றி நின்ற நட்புகள் பண்பு கூடிப் பேசவும்
கற்றறிந்த சபையிலே எந்தன் வாக்கு வெல்லவும்
யோகி ராம்சுரத்குமார் என்னை வந்து ஆளுவாய்.

8. பச்சை நெல்லு வயலிலே வெள்ளை கொக்கு காட்சியாய்
இச்சை கொண்ட என்னுள்ளே உந்தன் ரூபம் ஜோதியாய்
அச்சுவெல்லக் கட்டியாக ஆணையாகத் தோன்றுவாய்
யோகி ராம்சுரத்குமார் என்னை வந்து ஆளுவாய்.

9. செம்மையாய்ச் சிறப்பினோடு சேர்ந்துவந்த செல்வமாய்
தன்மையாய்த் தடங்கலின்றி தாழ்ந்துவந்த மேகமாய்
உண்மையாய் உணர்ச்சியாய் உயர்வடைந்த காதலாய்
யோகி ராம்சுரத்குமார் என்னை வந்து ஆளுவாய்.

10. ஆண்டகை அணைத்த கை அன்பு அன்பு செய்ததை
தூண்டலைத் துளைத்தலைத் தோன்றி நின்ற ஜோதியை
விண்ட பால குமரனிங்கு எழுதிவந்த பாட்டிலே
யோகி ராம்சுரத்குமார் நின்று என்றும் ஆளுவாய்.

❖ ❖ ❖

http://www.writerbalakumaran.com

## அருள் நாடல்

**ராகம் : வாகதீஸ்வரி** **தாளம் : ரூபகம்**

### பல்லவி

ஸ்வாமி யோக ராமன் நீ
சரணடைந் தேன் உன்னை (ஸ்வாமி) அருள்

### அனுபல்லவி

யோகி சூரிய சுடரொளி தான் நீ
சுமைகள் அகற்றும் ஞான காரணி (ஸ்வாமி)

### சரணம்

வண் தமிழ் வேதம் நான் அறிந்தாலும்
ஞான நூல்களைக் கற்றறிந்தாலும்
தாமரை நீரின்றி வாடுதல் போல் மனம்
அன்பெனும் பெருமழை உன்னிடம் தேடியே (ஸ்வாமி)

## மங்களம்

**ராகம் : நளினகாந்தி**

### பல்லவி

ஞானபாஸ்கரா குரோ குரோ
யோகி ராம்சுரத்குமாரா நமோ (ஞான)

### அனுபல்லவி

எனை ஆளவந்தாய் வினை தீரவே
நிழல் நீங்கி ஞானம் ஒளி பெறவே நிரந்தரமே (ஞான)

### சரணம்

கதிர் வீச மிளிரும் மதிபோலவே
குரல் நாளம் மீட்டி உனைப் பாடுவேன்
மலை மீது பொங்கும் புனல் போலவே
தினந் தோறும் என்னுள் களி நடனம் புதுபரதம் (ஞான)

http://www.writerbalakumaran.com

## துணை செய்ய வேண்டல்

1. ஊசி வழிபல ஓடம் வருமென
ஆசை தனில் மனம் அலைவேனே
காசு வளர்ந்திடும் மேசை செடியது
நூறு விதைத்திட முயல்வேனே

ஆழி நுரையென காதற் கனவுகள்
தேடி நிதநிதம் திரிவேனே
யோகி ராம்சுரத்குமார் ஸ்வாமி
வரையரை செய்வாயே

2. வீணை மொழியினில் மோக கவிதைகள்
பாணனென தினம் பகர்வேனே
பானை நீரினில் மூழ்கும் ஒலியென
நீதி பலரிடம் படிப்பேனே

பூனை என் மனம் பாலை துறந்திடும்
வேளை ஒரு தினம் வருமாமோ
யோகி ராம்சுரத்குமார ஸ்வாமி
எனை சரி செய்வாயே

http://www.writerbalakumaran.com

3. பூசை இதுவென வாசி இதுவென
பேசி பலரிடம் திமிராலே
வீசை நிறையென லாபம் பெறவென
நேசம் திறம்பட செய்வேனே

ஓசை அறுமனம் ஆசை அறு உயர்
தேசும் எனக்கினி வளராதோ
யோகி ராம்சுரத்குமாரா ஸ்வாமி
எனக்கிதை அருள்வாயே

4. தாசனென உனக்கான எனதிடம்
தூசு படிவது முறையாமோ
வீசு புயலென ஆசை பலவகை
பாசி மனதினில் படலாமோ

மாசு துடைத்திடு மாயம் தெரிந்திட
கூவி தினம் உனை அழைப்பேனே
யோகி ராம்சுரத்குமார ஸ்வாமி
எனக்கிதைச் செய்வாயே

5. நாத கடலினில் வேத கருப்பொருள்
காதில் நிறைந்திட அருள்வாயே
நாளும் உனக்கருகாமை உணர்ந்திடு
ஞான திறமையைத் தருவாயே

ஆவி குளிர்ந்திடும் ஆதி அறிந்திட
மார்க்கம் எதுவென பகர்வாயே
யோகி ராம்சுரத்குமார ஸ்வாமி
மனம் கனிந்தருள்வாயே

❖ ❖ ❖

http://www.writerbalakumaran.com

# புன்னை மர நிழலில்

புன்னை மர நிழலில் ஒரு பெருந்தவம் நடந்ததைக் கேள் ராதே
நம்மை மலர்த்திடவே யோகி தம்மை வருத்தினரே (புன்னை)

1. தவத்தினர் வளர் அருணை - ராதே
வயற்காடுகள் மேற் புறத்தே
உகுத்தனன் தன் நினைப்பை
ஊர் உன்னதம் பெறுவதற்கே - ராதே (புன்னைகை)

2. ஆனந்த சூட்சுமத்தை ராதே அன்புப் பெருங்கடலை
தன்னுள் நிரப்பினரே யோகி தந்து மகிழ்ந்திடவே
வேதனை தீர்வதற்கே - ராதே மாதேவதி வாழ்விடமாம்
ஞான சுதமாவில் பூரணன் யோகியின் தரிசனம் பார் ராதே
(புன்னை)

3. ஆதியின் சேஷமதில் அண்டம் விழுங்கிய பாற்கடலில் ராதே
தன் ஜீவிதம் சரணளித்த அன்னை தேவகி சேவையினில்
நாரண சுவாமியைப்போல் ராதே எங்கள் தேசிகள்
திகழுகிறான்
வந்து பதம் பணிவீர் அவன் வாழ்த்திணைப் பெறுவதற்கே
-ராதே (புன்னை)

http://www.writerbalakumaran.com

4. திங்கள் மலர்முகத்தை சிறு புல்லது காட்டிடுமோ - ராதே
எங்கள் யோகியின் மாட்சியினை இந்த
மூகன் உரைத்திடவோ
ஆனந்த வெள்ளமது ராதே அங்கு நின்றிடப் பாய்ந்திடுமே
அகன்றிடும் பல துயர்கள் மன அலைகடல் ஓய்ந்திடுமே
-ராதே (புன்னை)

5. இன்று நிகழ்ந்ததில்லை இது நேற்று முளைத்ததில்லை
-ராதே
நின்று நிரம்பியதாம் எங்கள் ஈசனின் பெருங் கருணை
இன்னொரு லீலையடி யோகிராம் சுரத்குமார்
கன்றுகள் மேய்த்தது போல் நம்மைக் காக்கின்ற கண்ணனடி
-ராதே (புன்னை)

❖ ❖ ❖

http://www.writerbalakumaran.com

# யோகி ராம்சுரத்குமாரம்

- உலகெலாம் உணர்ந்து வந்து ஓதுகின்ற மந்திரம்.
  உண்மையை அறிந்து கொள்ள ஈசன் தந்த தந்திரம்.
  கனவு காணும் அயர்வு நீக்கி காட்டுகின்ற ரூபகம்.
  யோகி ராம்சுரத்குமார் பூஜ்யபாத மங்களம். 1

- அருமையான மனித வாழ்வை வளமையாக்கும் மந்திரம்.
  ஆசைநீக்கி அன்பு காட்டும் நேசமான சூசகம்.
  வெறுமையல்ல ஞான மார்க்கம் வேத நாதம் என்றிடும்.
  யோகி ராம்சுரத்குமார பூஜ்யபாத மங்களம். 2

- தாழ்விலாத யோகமோடு தயையை மேலும் ஏற்றிடும்.
  தூய்மையான எண்ணமோடு துணிவு கூட வந்திடும்.
  ஏழ்பிறப்பும் வினையும் நீக்கி இனிமை நெஞ்சில் சேர்த்திடும்.
  யோகி ராம்சுரத்குமார பூஜ்யபாத மங்களம். 3

- தரும நெறியை கருமத்தொடு கலந்து வைக்க செய்திடும்.
  ஊசி காதில் ஒட்டகங்கள் உட்புகுந்து வந்திடும்.
  இருமையல்ல ஒருமையாவும் என்று காட்டும் போதகம்.
  யோகி ராம்சுரத்குமார பூஜ்யபாத மங்களம். 4

http://www.writerbalakumaran.com

❖ மாதவத்து முனிவர் வந்து வாழ்த்துகின்ற அம்பலம்.
வாய்மை கொண்ட பக்தரோடு அருணை நகரில் ஊர்வலம்.
தீ திறத்து எண்ணம் ஓடி தேவனாக்கும் ஸாதகம்.
யோகி ராம்சுரத்குமார பூஜ்யபாத மங்களம். 5

❖ ராமகாதை கீதையோடு ரமணிரிஷியை போற்றிடும்.
காய்ந்த நெஞ்சில் அருவி போல கனிவு உணர பேசிடும்.
காமவாதை கள்ள ஞானம் தட்டி தரையில் சாயத்திடும்.
யோகி ராம்சுரத்குமார பூஜ்யபாத மங்களம். 6

❖ தாமசத்தை நீக்கி நம்மை தனியனாக வைத்திடும்.
தனியனாக இருந்த போதும் ஞான உறவு சேர்த்திடும்.
நேமநிட்டை நாமவேள்வி நித்தம் நித்தம் ஏற்றிடும்.
யோகி ராம்சுரத்குமார பூஜ்யபாத மங்களம். 7

❖ வேள்வியாக வாழ்வு மாற தோல்வி என்பதெங்கனம்.
கேள்வியான தொல்லை விட்டு விடை கிடைக்கும் நிச்சயம்.
ஜீவிதத்தில் அர்த்தம் வந்து செயல் சிறக்க செய்திடும்.
யோகி ராம்சுரத்குமார பூஜ்யபாத மங்களம். 8

❖ யோகிநாமம் ராமநாமம் நிதமும் சொல்ல தோன்றிடும்
வாசியோகம் நெஞ்சில் கூடி சுடரெழும்பி நின்றிடும்..
சுடரெழும்ப அருள் வழிந்து தெய்வ காட்சி தந்திடும்.
யோகி ராம்சுரத்குமார பூஜ்யபாத மங்களம். 9

http://www.writerbalakumaran.com

❖ தெய்வ காட்சி கண்டவர்க்கு எந்த நாளும் மங்களம்.
தேனிலவை தெய்வத்தோடு கொண்டவர்க்கு மங்களம்.
தேவராக சீடர்களை மாற்றும் குருவும் மங்களம்.
யோகி ராம்சுரத்குமார பூஜ்யபாத மங்களம்.
யோகி ராம்சுரத்குமார பூஜ்யபாத மங்களம்.
யோகி ராம்சுரத்குமார பூஜ்யபாத மங்களம்.

❖ ❖ ❖

http://www.writerbalakumaran.com



http://www.writerbalakumaran.com

பிச்சைப் புகுதல் நன்று
போடுதல் நீதியென்று
இச்சையின்றி சொல்லித்தந்த
எங்க துரையே
சித்தமுடன் வந்து நின்றோம்
புத்தியென்ற எங்கள் ஓட்டில்
பிச்சையிடு காதல் சோறு
எங்க துரையே



எவர் வணங்கி நின்ற போதும்
அள்ளி அள்ளி தந்த போதம்
சாமகான வேத நாதம்
யோகி ராம்சுரத்குமாராம்

http://www.writerbalakumaran.com